**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**

**FAST TRACK COURT, ARANI.**

**S.C.No.125/2018**

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.14** |
| **Name** | **:** | **திரு.கிருஷ்ணமூர்த்தி** |
| **Father's Name** | **:** | **சதாசிவம்** |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

**1,2,4 முதல் 8 எதிரிகள் ஆஜர்.**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 12.06.2023.**

**முதல் விசாரணை -**

**நான் தற்போது தெள்ளார் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். 2011ம் ஆண்டு அதே காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, 29.7.2011 அன்று நிலைய பொறுப்பில் இருந்தபோது வந்தவாசி அரசு மருத்துவமனையில் இருந்து தகவல் கிடைக்கப்பெற்றதின்பேரில் மேல் அதிகாரிகளுக்கு தகவல் சொல்லிவிட்டு செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு சுமார் 7 மணி அளவில் சென்றேன். காயம்பட்ட மூன்று நபர்களை பார்த்தேன். செல்வராஜ்**

என்பவரிடம் வாக்குமூலம் பெற்றேன். செல்வராஜ் மனைவி குமாரி மற்றும் லட்சுமிதேவியும் இருந்தனர். 30.7.2011 அன்று காலை 9.30 மணிக்கு சி.எஸ்.ஆர். கொடுத்தேன். சிஎஸ்ஆர் பேரில் விசாரணை செய்து 1.8.2011 அன்று குற்ற எண்.204/2011ன்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.17.

பிறகு சம்பவ இடம் சென்று சாட்சிகள் செல்வராஜ், குமாரி, லட்சுமிதேவி, மகாலிங்கம், சிவக்குமார், சதாசிவம் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் சிவக்குமார் மற்றும் சதாசிவம் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகசர் அ.சா.ஆ.18. மாதிரி வரைபடம் அ.சா.ஆ.19.

பின்னர் 14.30 மணிக்கு எதிரி ஏழுமலை என்பவர் சம்பவ இடத்தில் இருந்தவரை கைது செய்து நிலையம் அழைத்து வந்து ஆய்வாளரிடம் தெரிவித்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பிறகு மறுநாள் சென்னை சென்று கண்ணன் என்பவரிடம் ஓரளவு பேசியதை வாக்குமூலமாக பதிவு செய்தேன். ஆய்வாளரிடம் கோப்பை ஒப்படைத்தேன். சாட்சி மகாலிங்கமும், சிவக்குமாரும் வாக்குமூலத்தில் உள்ளவாறு தான் என்னிடம் வாக்குமூலம் கொடுத்தார்கள்.

1,2 மற்றும் 4 முதல் 7 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

கற்றறிந்த எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் இவ்வழக்கின் பகுதி விசாரணை அதிகாரியான இச்சாட்சியை தான் 91 கு.வி.மு.ச-ன் கீழ் மனு தாக்கல் செய்து,

**அதில் பெறும் ஆவணங்களின் கீழ் குறுக்கு விசாரணை செய்யவேண்டியுள்ளதால் ஆவணங்கள் நீதிமன்றத்தில் கிடைக்கப்பெற்றவுடன் குறுக்கு விசாரணை செய்ய தயாராக இருப்பதாக வேண்டிக்கொண்டதன் அடிப்படையில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-K.Vijaya.
Additional Sessions Judge,
Arani.